**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No.156/2020**

PW-3

| | | | |
|---|---|---|---|
| Name | சதிஷ் (PW3) | | |
| Father's Name | சாமிநாதன் | Calling | |
| Village | தண்டுக்காரன் பாளையம் | | |
| Taluk | அவிநாசி | Age | 36 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th **day of April 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு தனியார் நிறுவனத்தில் பணி செய்து வருகிறேன். கடந்த 04.01.2020ம் தேதி காலை 10.00 மணியளவில் நானும் எனது நண்பர் சதிஷ்குமாரும் லூர்துபுரத்தில் உள்ள பிள்ளையார் அருகில் நின்று பேசிக் கொண்டிருந்தோம். அப்போது சேயூர்- புளியம்பட்டி போகும் திசையில் ஒரு Yamaha R15 இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் வேகமாக வந்தார்கள். அந்த வாகனம் மண் ரோட்டில் இறங்கியதால் பின்னால் அமர்ந்திருந்த நபர் கீழே விழுந்து அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டு அந்த இடத்திலேயே இறந்துவிட்டார். ஓட்டி வந்த நபருக்கு கொஞ்சம் காயம் ஏற்பட்டு இருந்தது. காயம் ஏற்பட்ட நபரை மட்டும் ஆம்புலன்சில் அழைத்து போனார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். விபத்து நடந்த சமயத்தில் அந்த இருசக்கர வாகனத்தினை ஓட்டி வந்த நபரை நான் பார்த்தேன், அவரை தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும், அந்த நபர் ஆஜர் எதிரிதான்.

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில் :**

நான் வசித்து வரும் தண்டுக்காரன் பாளையத்திற்கும் லூர்துபுரத்திற்கும் இரண்டு கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். பிள்ளையார் தோட்டத்திற்கும் அங்கு இருக்கும் சின்ன பாலத்திற்கும் சுமார் 250 அடி தூரம் இருக்கும் என்றால் சரிதான். சின்ன பாலத்திற்கும் பிள்ளையார் கோவிலுக்கும் 150 அடி தூரம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் தோட்டத்திற்கும் கோவிலுக்கும் நடுவில் நடந்தது. அந்த ரோடு தென் வடல் ரோடு என்றால் சரிதான். லூர்துபுரத்தில் ரோடு எஸ் பெண்டாக இருக்கும் என்றால் சரிதான். புளியம்பட்டியில் இருந்து வரும் ரோடும் வண்டிக்காரன் பாளையத்திலிருந்து வரும் ரோடும் இரக்கமாக தான் இருக்கும் என்றால் சரிதான். நான் பிள்ளையார் கோவிலுக்கு எதற்காக சென்றிருந்தேன்

என்றால் என்னுடைய நண்பர் மகேஷ் தோட்டம் உள்ளது. அவரைப் பார்ப்பதற்காக சென்று இருந்தேன். விபத்து நடந்த சமயத்தில் அந்த இரு நபர்களின் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்து நடந்த உடன் கிஷோர் வண்டியின் இடது புறத்திலும், சஞ்சய் வண்டியின் வலது புறத்திலும் விழுந்திருந்தார்கள். இருவரும் வண்டிக்கு அருகிலேயே விழுந்து இருந்தார்கள். சம்பவ இடத்திற்கு போலீசார் ஒன்றரை மணி நேரம் கழித்து வந்தார்கள். போலீசார் சம்பவ இடத்திற்கு வரும்போது நான் அங்கு தான் இருந்தேன். கிஷோரின் தகப்பனார் சம்பவ இடத்திற்கு இரண்டு மணி நேரத்திற்குள் வந்திருப்பார். கிஷோரின் தகப்பனார் சம்பவ இடம் வரும் வரைக்கும் கிஷோர் சம்பவ இடத்திலேயே தான் இருந்தார். சத்தியமங்கலத்தில் இருந்து திருப்பூர் செல்லும் பேருந்து லாரியை ஓவர் டெக் செய்து வரும்போதுதான் இந்த விபத்து நடந்தது என்றால் இல்லை. இந்த விபத்து எதிரியின் கவனக்குறைவால் நடக்கவில்லை என்றும் பஸ் இரக்கத்தில் வரும் போது சைடு எடுத்து வரும்போது ரோட்டின் ஓரமாக வந்ததால் தான் மண் தரைக்கு இருசக்கர வாகனம் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது என்றால் இல்லை. நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும் விபத்தில் இறந்து போன நபருக்கு நஷ்ட ஈடு பெற வேண்டி நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |